**நிகழும் சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 12 ஆம் நாள் (29.09.2023) வெள்ளிக்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்**

**பொருள் எண்.1 :**

நாமக்கல் நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்ட் 2023ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண் : 573, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 2 :**

நாமக்கல் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2023ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண் : 574, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.3 :**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான மோகனூர் தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கிவரும் 120ஹச்.பி மோட்டார் 1இல் பம்ப் சாப்ட் பழுதாகிவிட்டதால் மோட்டாரினை இயக்க முடியாத நிலையில் உள்ளது. தற்போது ஆற்றில் நீர்வரத்து குறைந்து கொண்டுவருவதால் மேற்கண்ட மோட்டாரினை பழுதுபார்த்து சரிசெய்து பயன்பாட்டு நிலைக்கு கொண்டுவரவேண்டியது அத்தியாவசியமாக உள்ளது.

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 5552 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 575, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4 :**

நாமக்கல் நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு, கொரோனா நோய் தடுப்பு பணிகள் DBC பணியாளர்களை கொண்டு நடைபெற்று வருகின்றது. மேற்கண்ட பணியினை ஆஞ்சநேயா மகளிர் சுய உதவிக்குழு மூலமாக 01.04.2023 முதல் 30.09.2023 வரை தொடர்ந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.182, நாள்.24.03.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு நாளது தேதி வரை நல்லமுறையில் பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. எனவே மேற்கண்ட பணியினை ஆஞ்சநேயா மகளிர் சுய உதவிக்குழு மூலமாகவே தொடர்ந்து 01.10.2023 முதல் 31.03.2024 வரை 60பணியாளர்கள் வரை கொண்டு மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.40.00இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மேற்கண்ட பணியினை ஆஞ்சநேயா மகளிர் சுய உதவிக்குழு மூலமாகவே 01.10.2023 முதல் 31.03.2024 வரை தொடர்ந்து மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க. எண். 4797/2022/எச்1)**

**தீர்மானம் எண் : 576, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5 :**

நாமக்கல் நகராட்சியில் கொண்டிசெட்டிப்பட்டி பகுதியில் கலைஞர் நகர்புர மேம்பாட்டு திட்டம் 2021–2022இன்கீழ் புதியதாக நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்திற்கு கொள்முதல் செய்யப்படும் நூல்களுக்கான செலவினத்தொகை ஒரு நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு ரூ.10.00இலட்சம் என நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.27968/2022/தி1, நாள்.28.08.2021 வாயிலாக கணக்கிடப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையை நகராட்சி நிர்வாக இயக்குநரக KNMT வங்கி கணக்கில் செலுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே அறிவுசார் மையத்திற்கு கொள்முதல் செய்யப்படும் நூல்களுக்கான செலவினத்தொகை ரூ.10.00இலட்சத்தினை நகராட்சி நிர்வாக இயக்குநரக சென்னை அவர்களின் KNMT வங்கி கணக்கில் செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உரிய அனுமதி பெற்று நகராட்சி நூலகவரி நிதியிலிருந்து ஈடுசெய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்காலம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று அரசு கணக்கில் தொகை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5899 /2021/இ1)**

**தீர்மானம் எண் : 577, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கழிவுநீர் நச்சுத் தொட்டிகளை (செப்டிக் டேங்க்) சுத்தம் செய்ய தனியார் கசடு கழிவுநீர் அகற்றும் வாகனத்தினை பயன்படுத்தி சுத்தம் செய்தல் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ. 3,00,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி நாள்: 07.08.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 25.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. ராஜா செப்டிங் டேங்க் கிளினிங், நாமக்கல் – ரூ. 3,000/– (ஒரு நடைக்கு)
2. பரமசிவம் செப்டிங் டேங்க் கிளினிங், நாமக்கல் – ரூ. 3,050 /– (ஒரு நடைக்கு)

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** :– மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த ராஜா செப்டிங் டேங்க் கிளினிங், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்ற அனுமதிக்கலாம். **(ந.க.எண். 4893/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 578, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 7 :</u>**

நாமக்கல் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் TN 88 8282 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதால் பழுதுகளை உடனடியாக சரி செய்ய வேண்டியதின்அவசர அவசியம் கருதி, மேற்கண்ட மகேந்திரா ஈப்பு வாகனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Sri Lakshmi Auto Mobiles World, சேலம் என்ற நிறுவனத்தின் மூலமாக நேரடியாக பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச செலவினமாக ரூ.23000/ –ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசரம் அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியைப்பெற்று மேற்கண்ட பணிக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Sri Lakshmi Auto Mobiles World, சேலம் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 5410/2023/இ2)**

**தீர்மானம் எண் : 579, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8 :</u>**

கொரோனா நோய் தொற்று காரணமாக மத்திய அரசு மற்றும் மாநில அரசால் 24.03.2020 முதல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால் நகராட்சிக்கு சொந்தமான வணிகம் மேற்கொள்ளாமல் இருந்த கடைகள் மற்றும் ஆண்டு குத்தகை இனங்களுக்கு கொரோனா நோய் தொற்று முதல் அலை காலமான 2020–2021 நிதியாண்டிற்கு ஜுன் – 2020, ஜுலை – 2020 மற்றும் ஆகஸ்ட் – 2020 ஆகிய மூன்று மாதங்களுக்கும், கொரோனா நோய் தொற்று இரண்டாம் அலை காலமான 2021 – 2022 நிதியாண்டிற்கு மே –2021 மற்றும் ஜுன் – 2021 ஆகிய இரண்டு மாதங்களுக்கும் ஆக மொத்தம் ஐந்து மாதங்களுக்கு வாடகை மற்றும் குத்தகை உரிமத்தொகையினை தள்ளுபடி செய்ய உத்தரவிடப்பட்டு பெறப்பட்டுள்ள அரசாணை (D) எண்.337, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள் : 16.06.2023ஐ மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(ந.க.எண். 3197 /2022/அ2)**

**தீர்மானம் எண் : 580, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 9 :**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள் : 16.06.2023 அரசாணை (நிலை) எண்.337இல் கொரோனா நோய் தொற்று பரவாமல் தவிர்க்கும் பொருட்டு மத்திய அரசு மற்றும் மாநில அரசால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு காலத்தில் நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகங்களில் வணிகம் மேற்கொள்ளாமல் இருந்த கடைகள் மற்றும் ஆண்டு குத்தகை இனங்களுக்கு கொரோனா நோய் தொற்று முதல் அலை காலமான 2020–2021 நிதியாண்டில் 01.06.2020 முதல் 31.08.2020 வரை மூன்று மாதங்களுக்கும், கொரோனா நோய் தொற்று இரண்டாம் அலை காலமான 2021 – 2022 நிதியாண்டில் 01.05.2021 முதல் 30.06.2021 ஆகிய இரண்டு மாதங்களுக்கும் வாடகை மற்றும் உரிமத்தொகையினை தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின்படி, ஜுன் – 2020, ஜுலை – 2020, ஆகஸ்ட் – 2020, மே – 2021 மற்றும் ஜுன் – 2021 ஆகிய ஐந்து மாதங்களுக்கு கணக்கீடப்பட்ட கீழ்காணும் விபரப்படியான ரூ.1,46,74,716/–க்கான தொகைகளை தள்ளுபடி செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒன்பதாண்டு குத்தகை இனங்கள் | மொத்த கடைகளின் எண்ணிக்கை | கொரோனா காலத்தில் செயல்பட்ட கடைகளின் எண்ணிக்கை | ஏலத்தில் வைக்கப்பட்ட கடைகளின் எண்ணிக்கை | தள்ளுபடி செய்யப்பட வேண்டிய கடைகளின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | முதல் அலை காலமான ஜுன்–2020, ஜுலை–2020 மற்றும் ஆகஸ்ட்– 2020 ஆகிய மூன்று மாதத்திற்கு தள்ளுப்படி செய்யப்படும் உரிம இனங்களின் எண்ணிக்கை | 223 | 12 (மருந்தகம் மற்றும் ஆவின் பாலகம்) | 23 | 188 | 58,30,038/– |
| | இரண்டாம் அலை காலமான மே – 2021 மற்றும் ஜுன்– 2021 ஆகிய இரண்டு மாதத்திற்கு தள்ளுப்படி செய்யப்படும் உரிம இனங்களின் எண்ணிக்கை. | 223 | 12 (மருந்தகம் மற்றும் ஆவின் பாலகம்) | 22 | 189 | 39,09,092/– |
| தள்ளுபடி செய்ய வேண்டிய மொத்த தொகை | | | | | | 97,39,130/– |

| வ. எண் | ஓராண்டு குத்தகை இனங்கள் | மொத்த குத்தகை இனங்களின் எண்ணிக்கை | கொரோனா காலத்தில் செயல்பட்ட இனங்களின் எண்ணிக்கை | ஏலத்தில் வைக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை | தள்ளுபடி செய்யப்பட வேண்டிய இனங்களின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | முதல் அலை காலமான ஜுன்–2020, ஜுலை–2020 மற்றும் ஆகஸ்ட்– 2020 ஆகிய மூன்று மாதத்திற்கு தள்ளுப்படி செய்யப்படும் உரிம இனங்களின் எண்ணிக்கை | 22 | 2 | – | 20 | 28,46,080/– |
| | இரண்டாம் அலை காலமான மே – 2021 மற்றும் ஜுன்– 2021 ஆகிய இரண்டு மாதத்திற்கு தள்ளுப்படி செய்யப்படும் உரிம இனங்களின் எண்ணிக்கை. | 22 | 2 | 1 | 19 | 20,89,506/– |
| தள்ளுபடி செய்ய வேண்டிய மொத்த தொகை | | | | | | 49,35,586/– |

அலுவலக குறிப்பு : அரசாணையின் படி ஒன்பது ஆண்டு குத்தகை இனங்களுக்கு ஐந்து மாதங்களுக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய தொகை ரூ.**97,39,130/–** மற்றும் ஒராண்டு குத்தகை இனங்களுக்கு ஐந்து மாதங்களுக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய தொகை **ரூ.49,35,586/–**ஐ ஆக இரண்டு இனங்களுக்கும் தள்ளுபடி செய்ய வேண்டிய மொத்த தொகை **ரூ.1,46,74,716/–** ஐ தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 3197/2022/அ2)**

**தீர்மானம் எண் : 581, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10 :</u>**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் கீழ்கண்ட வாகனத்தில் உள்ள பேட்டரி பழுதடைந்துள்ளதால், அவற்றினை புதியதாக மாற்றி அமைக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | செலவினத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | TN 88 4395 காம்பேக்டர் வாகனத்திற்கு புதிய பேட்டரி கொள்முதல் செய்து பொருத்தும் பணி | 13000/– |

மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ.13000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.5470/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 582, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11:</u>**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN 88 4395 (காம்பேக்டர்) எண்ணுள்ள வாகனத்தின் தகுதி சான்று பெற தேவையான மராமத்து பணிகளை மேற்கொள்வதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனைகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் உத்தேச செலவினமாக ரூ.2,37,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 5736/2023/எச்1 )**

**தீர்மானம் எண் : 583, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12 :</u>**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் தூய்மைப்பணி மேற்கொள்வதற்கு தேவையான தளவாடப் பொருட்கள் விநியோகம் செய்யும் பணிகள் ரூ.9,50,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 526, நாள்: 31.08.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 20.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண். | பொருட்களின் பட்டியல் | எண்ணிக்கை | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் | | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன் | |
|---|---|---|---|---|---|---|
| | | | விலை | தொகை ரூ. | விலை | தொகை ரூ. |
| 1 | மண்வெட்டி + கைபிடியுடன் | 100 | 448 | 44800 | 446 | 44600 |
| 2 | கடப்பாரை | 25 | 974 | 24350 | 970 | 24250 |
| 3 | தடி கூட்டுமாறு | 500 | 390 | 195000 | 388 | 194000 |
| 4 | கை விளக்குமாறு | 1000 | 60 | 60000 | 58 | 58000 |
| 5 | குப்பை அள்ளும் தகரம் | 100 | 143 | 14300 | 140 | 14000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | அன்னக்கூடை பிளாஸ்டிக் | 250 | 765 | 191250 | 760 | 190000 |
| 7 | பிளாஸ்டி சட்டி | 250 | 433 | 108250 | 430 | 107500 |
| 8 | அரிவாள் | 100 | 190 | 19000 | 187 | 18700 |
| 9 | கொடுவாள் | 50 | 676 | 33800 | 670 | 33500 |
| 10 | சம்மட்டி + கைபிடி | 10 | 945 | 9450 | 941 | 9410 |
| 11 | சாக்கடை சுரண்டி பிடியுடன் | 100 | 587 | 58700 | 580 | 58000 |
| 12 | ஆபிஸ் கூட்டு மாறு (டைல்ஸ்) | 100 | 264 | 26400 | 260 | 26000 |
| 13 | ஆபிஸ் மாப்பு (டைல்ஸ்) | 100 | 332 | 33200 | 330 | 33000 |
| 14 | கழிப்பிட பிரஸ் (டாய்லட் பிரஸ்) | 25 | 147 | 3675 | 140 | 3500 |
| 15 | 4 பல் கொக்கி பிடியுடன் | 50 | 990 | 49500 | 980 | 49000 |
| 16 | பிளாஸ்டிக் பக்கெட் (பிளாஸ்டிக் வாளி) (15லிட்டர்) | 50 | 410 | 20500 | 400 | 20000 |
| 17 | மக்கு (3/4 லிட்டர்) | 50 | 84 | 4200 | 80 | 4000 |
| 18 | மூங்கில் கூடை | 100 | 570 | 57000 | 560 | 56000 |
| மொத்தம் | | **2960** | **8408** | **953375** | **8320** | **943460** |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :–** மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 5139/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 584, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 13 :</u>**

நாமக்கல் நகராட்சியில் பணிபுரியும் கீழ்காணும் பணியாளர்கள் மடிகணினி மற்றும் மேஜைக்கணினி வாங்கிகொள்ள முன்பணம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பதவி | முன்பணம் கோரும் விவரம் | முன்பணம் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.ப. கண்ணன், உதவி திட்ட அமைப்பாளர் | மடிகணினி வாங்கிகொள்ள | ரூ.60,000/– |
| 2 | திரு. சி. ராம்குமார், இளநிலை உதவியாளர் | மேஜைகணினி வாங்கிகொள்ள | ரூ.59,900/– |
| 3 | திரு. கோ. கருணாநிதி, ஓட்டுநர் | மடிகணினி வாங்கிகொள்ள முன்பணம் | ரூ.60,000/– |

எனவே மேற்கண்ட மூன்று பணியாளர்களுக்கு முன்பணம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :–** மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண். 5601/2023/பி3)**

**தீர்மானம் எண் : 585, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 14 :</u>**

நாமக்கல் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 23/2013/அ4, நாள்.01.08.2023 இல், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையில் முக்கிய சுற்றுலாதலங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை நேரடியாக விற்பனை செய்ய மகளிர் திட்டம் அங்காடிகள் அமைப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார். நாமக்கல் மாவட்டத்தில் 3 மகளிர் திட்டம் அங்காடிகள்

அமைக்க இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டு அறிவுரைகள் வரப்பெற்றுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் மகளிர் திட்டம் அங்காடிகள்அமைக்க இடம் தேர்வு செய்தல் தொடர்பாக நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் **14.07.2023** அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், சுற்றுலா தலமான ஆஞ்சநேயர் கோவில் அமைந்துள்ள பகுதியில் அல்லது உழவர் சந்தை பகுதியில் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படியான இரண்டு இடங்களில் ஏதேனும் ஒரு இடத்தில் மகளிர் திட்டம் அங்காடி அமைக்க இடம் தேர்வு செய்து வழங்குமாறும் அறிவுறுத்தப்படுள்ளது.

எனவே, நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பூங்கா சாலையில் அமைந்துள்ள அம்மா உணவகத்திற்கு அருகில் உள்ள காலியிடத்தில் 10 X 10 என்ற அளவில் மகளிர் திட்டம் அங்காடி அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 5100 /2023/எப்1)**

**தீர்மானம் எண் : 586, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 15 :</u>**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் உள்ள நேரம் காப்பாளர் அறை வரிவிதிப்பு எண்.**051/162** SETC (சேலம் லிமிடெட்) **01.07.2022** முதல் உரிமம் புதுப்பிக்கப்படாமலும் கடையினை நகராட்சி வசம் ஒப்படைக்கப்படாமல் கடை திறக்காமல் பூட்டியே இருப்பதால் மேற்படி கடையின் கட்டிடத்தின் ஸ்திரத்தன்மை (Stablility) பாதிக்கப்படுவதால் கடையை பொது ஏலத்திற்கு கொண்டுவரவும் மற்றும் நேரம் காப்பாளர் அறைக்கு கிளை மேலாளருக்கு வழங்கப்பட்ட உரிமத்தினை ரத்து செய்து பொது ஏலத்திற்கு கொண்டுவரவும் மற்றும் ஏல வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் மூலம் பராமரிப்பிற்கு கொண்டுவர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **உரிம இனங்களின் பெயர்** | **ஏலம் / ஒப்பந்தப் புள்ளிக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ. (ஏலம், ஒப்பந்தப்புள்ளிக்கு தனித்தனியாக வைப்புத் தொகை செலுத்த வேண்டும்)** | **கூடுதல் வைப்புத் தொகை ரூ.** | **ஏலம் / ஒப்பந்தப் புள்ளி உறுதியான பின் செலுத்த வேண்டிய தொகை (ஏல முன் வைப்புத் தொகை நீங்களாக) ரூ.** | **சேவை வரி (GST)** |
|---|---|---|---|---|---|
| **1** | பேருந்துநிலையத்தில் உள்ள நேரம் காப்பாளர் அறை (அம்பாள் உணவக விடுதி மேற்கு புறம் உள்ள நேரம் காப்பாளர் அறை) | **50,000/–** | **50,000/–** | ஒரு வருட வாடகை முழுவதும் வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும். | பிரதிமாதம் வாடகையுடன் 18 சதவிதம் செலுத்தப்பட வேண்டும். |

<u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதிவழங்கலாம். **(ந.க.எண். 4922/2022/அ2)**

**தீர்மானம் எண் : 587, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 16 :</u>**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான துறையூர் சாலை அமைந்துள்ள பாவலர் முத்துசாமி திருமண மண்டபத்தில் சமையல்கூடம் மற்றும் உணவு அருந்தும் இடத்தில் தரைதளம், மின்விசிறி, மின்விளக்குகள் பராமரித்தல், வர்ணம் பூசுதல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுதும் அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**15.00**இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 4810 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 588, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 17 :</u>**

நாமக்கல் நகராட்சியில் புதியதாக கொள்முதல் செய்யப்பட்டுள்ள KUBOTA வாகனத்தினை வேறுவேறு இடத்திற்கு கொண்டு செல்ல 1 டிரைலர் வாகனம் தயார் செய்து விநியோகம் செய்தல் ரூ.3.20 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.563, நாள்.31.08.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 15.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு.பி. மாணிக்கம், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.13 சதவீதம் குறைவு
2. MPS Engineering, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 1.88 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த திரு.பி. மாணிக்கம், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 5397 /2023 /இ1)**

**தீர்மானம் எண் : 589, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 18 :</u>**

நாமக்கல் நகராட்சியில் மோகனூர் மற்றும் ஜேடர்பாளையம் காவேரி ஆற்றிலிருந்து தினசரி 19MLD குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு நகராட்சிக்குட்பட்ட 39 வார்டுகளில் 24 வார்டுகளுக்கு தினசரியும், 15 வார்டுகளுக்கு இரண்டு நாட்களுக்கு ஒருமுறை 135 LPCD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நாமக்கல் நகராட்சியுடன் 2011இல் புதியதாக இணைக்கப்பட்ட வார்டு பகுதிகளுக்கு TNSUDP திட்டத்தின் மூலம் ரூ.256.41கோடி மதிப்பீட்டில் காவேரி நீரை ஆதாரமாகக் கொண்டு ஜேடர்பாளையம் காவிரி ஆற்றின் கரையில் 10.50MLD குடிநீர் 63 DMA Zone வாயிலாக 23403 குடிநீர் இணைப்புகளுக்கு தினசரி 135 LPCD வழங்கப்பட்டு வருகிறது. நாமக்கல் நகராட்சியில் அனைத்து பகுதிகளுக்கும் தினசரி குடிநீர் வழங்க அமைக்கப்பட்டுள்ள பழைய நகரின் பம்பிங் மெயின், பகிர்மானக் குழாய்கள் 1969, 1989 ஆகிய ஆண்டுகளில் பதிக்கப்பட்டவையாக உள்ளதால் அவ்வப்போது உடைப்பு ஏற்பட்டு சீரான குடிநீர் விநியோகம் பாதிப்படைகிறது. எனவே பழைய நகரப்பகுதியில் 10.50கி.மீ நீளத்திற்கு புதியதாக பம்பிங் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய்கள் பழைய DMA Zonation முறையில் அமைக்க கலந்தாலோசகர் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணியினை மேற்கொள்ள தேவைப்படும் உத்தேச செலவினம் ரூ.10.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 5979/2023/இ1)**

**தீர்மானம் எண் : 590, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 19 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38, கொண்டிசெட்டிப்பட்டி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அருகில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல மிகவும் சிரமமாக உள்ளது. மேற்கண்ட பகுதியில் உள்ள சிறுபாலத்தினை உடனடியாக சீரமைக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.50இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.5980/2023/இ1)**

**தீர்மானம் எண் : 591, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 20 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் எதிரில் கமலாலயம் குளத்தின் உபரி நீர் சாலையில் சென்று பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதால் உபரி நீர் கமலாலய குளத்தின் கரையில் Trenchless முறையில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி கரையில் இருபுறமும் Valve Chamber அமைத்து DI Pine மூலம் உபரி நீரினை மழைநீர் வடிகாலில் கொண்டு செல்வது அத்தியாவசியமாக உள்ளது.

இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 5981 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 592, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 21 :</u>**

நாமக்கல் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட **9** ஊராட்சி பகுதியில் **149** மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் ஏற்கனவே அமைந்துள்ளன.

மேற்கண்ட தொட்டிக்களுக்கு அருகில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகள், பொதுகிணறுகள், நகராட்சி பொதுகுழாய்கள் மற்றும் நகராட்சி குடிநீர் வாகனம் மூலம் குடிநீர் ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பணியை ஊராட்சியாக இருந்தபோது 26 நிரந்தர பணியாளர்கள் மற்றும் தேவைக்கு ஏற்றவாறு தற்காலிகமாக பணியாளர்களை அமைத்து பணி மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் தற்போது ஓய்வுபெற்ற பணியாளர்கள் போக மீதம் 9நிரந்தர பணியாளர்கள் மட்டுமே உள்ளனர்.மேற்படி இந்த 9 ஊராட்சி பகுதிகளிலுள்ள இந்த மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளை சீரான முறையில் இயக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்து பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

தற்போது இந்த புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் புதிதாக கொண்டுவரப்பட்ட குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் விநியோகிக்கும் பணியில் சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. ஆனால் இன்னும் இந்த இணைக்கப்பட்ட சில பகுதிகளில் உள்ள இணைப்புகளில் குறைவான உந்துநிலை காரணமாக கீழ்க்கண்ட அட்டவனையில் தொட்டிகள் அமைந்துள்ள பகுதிகளில் குடிநீர் சரிவர விநியோகிக்க இயலாத நிலை மற்றும் சில குடியிருப்புகளுக்கு இன்னும் குடிநீர் இணைப்பு பெறப்படாமல உள்ளதால் அங்குள்ள பொது குழாய்கள் மூலம் விநியோகிக்கும் சூழ்நிலை உள்ளது.

| நாமக்கல் நகராட்சி<br>இயக்கப்பட வேண்டிய தொட்டிகள் விபரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| **Sl no** | **Habitation** | **Cap (lakhs)** | **Sl no** | **Habitation** | **Cap (lakhs)** |
| | **CHINNA MUTHALAPATTY** | | | **KAVETTIPATTI** | |
| 1 | NGGO Colony | 0.60 | 31 | KavettipattyMerkuvethi old AR st | 0.30 |
| 2 | Kaverinagar | 0.30 | 32 | Kavettipatty (School Back) | 0.30 |
| 3 | Rajiv gandhinagarUttachaththumaiyam | 0.60 | 33 | Kavettipattyputhur | 0.10 |
| 4 | Kathi board colony | 0.10 | | **PERIAPATTI** | |
| 5 | kathi board colony Perumalkovil near | 0.30 | 34 | Prasannanagar | 0.60 |
| 6 | Ammachiammankovil street | 0.30 | 35 | Kamarajarnagar | 0.60 |
| 7 | Chinnamuthalaipatty Elem. school | 0.30 | 36 | Anna nagar | 0.10 |
| 8 | Kadakal (Rail road near) | 0.10 | 37 | EB colony | 2.00 |
| 9 | Vadakku colony mayanam | 0.10 | 38 | Lakkampalayamkuditheru | 0.30 |
| 10 | Anbunagar II | 0.30 | 39 | Lakkampalayamsctheru | 0.30 |
| 11 | Ammachiammannagarkoil NEAR | 0.10 | 40 | Pothupatty | 0.10 |
| 12 | Ammachiammannagar south | 0.10 | 41 | Mayilvaganam colony | 0.30 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | Anbu Nagar II | 0.30 | 42 | MGR nagar | 0.10 |
| | **AYYAMPALAYAM** | | 43 | Ponnarsankarnagar | 0.30 |
| 14 | Chinnaaiyampalayam (Near Koil) | 0.30 | 44 | Selvaganapathinagar | 0.10 |
| 15 | Chinnaaiyampalayam (Open well near) | 0.30 | 45 | Anna nagar | 0.10 |
| 16 | Chinnaaiyampalayam (Ar street) | 0.10 | 46 | EB colony | 2.0 |
| 17 | Balajinagar | 0.10 | | **THUMMANKURUCHI** | |
| 18 | Barathithasannagar | 0.30 | 47 | Thummankurichikudi ST | 0.30 |
| 19 | Barathithasannagar | 0.10 | 48 | Adidravidar street | 0.30 |
| 20 | PeriaAyyampalayam(Maharishi Nagar) | 0.30 | 49 | Therkkuthottam | 0.30 |
| | **KONDICHETTIPATTI** | | 50 | Arunthathiyar street | 0.10 |
| 21 | Rajajinagar | 0.30 | 51 | Semmankadu | 0.10 |
| 22 | Mullainagar | 0.30 | 52 | Periyurkuditheru | 0.30 |
| 23 | Valluvarnagar | 0.10 | 53 | Vannampali | 0.10 |
| 24 | Alagunagar - near maithanam | 0.30 | 54 | Krishnapuramreddiar street | 0.10 |
| 25 | Mullainagar M type | 0.30 | 55 | Aalamaram street | 0.30 |
| 26 | Kunnamarathurnagar | 0.60 | 56 | Naduththeru | 0.30 |
| 27 | Kondichettipatty | 1.00 | 57 | Teachers colony | 0.60 |
| 28 | Kondichettipatty | 0.60 | 58 | UththamapalayamArtheru | 0.10 |
| 29 | Kondichettipatty | 0.30 | 59 | Muslims street | 0.10 |
| 30 | Narikuravar colony | 0.10 | 60 | Nadar street | 0.10 |
| | | | 61 | Karupattipalayamkuditheru | 0.30 |
| | | | 62 | Arunthathiar street | 0.10 |
| | **MUDALAPATTI** | | | **NALLIPALAYAM** | |
| 63 | VIP nagar | 0.60 | 68 | Mariammankovil near | 0.60 |
| 64 | VIP nagar | 0.30 | | | |
| 65 | Indranagar | 0.30 | | | |
| 66 | Muthalaipttyputhur school near | 0.60 | | | |
| 67 | Muthalaipttyputhurvadakkuvethi | 0.30 | | | |

மேலும் இந்த புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் அமைத்துள்ள நகராட்சி பொது கழிப்பிடங்கள், மருத்துவமனைகள், பள்ளிகூடங்கள், பூங்காக்கள் மற்றும் குடிநீர் குழாய்கள் பழுதடைந்த இடங்கள் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் மற்றும் ஆழ்துளைக்கிணறு மூலம் விநியோகம் செய்யவேண்டியுள்ள சூழ்நிலை உள்ளது.

அவ்வகையில் மேற்குறிப்பிடப்பட்ட 68 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள், ஆழ்துளைக்கிணறு மற்றும் குடிநீர் வாகனம் மூலம் நீரேற்றம் செய்து தற்போது வரை இயக்கப்பட்டு வருகிறது மேலும் இது தொடரவேண்டியது அவசியமாகிறது. எனவே இப்பணியை மேலும் 6 மாதத்திற்கு ஏற்ப பணிசெய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 9.70 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. குடிநீர் விநியோகப் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். **( ந.க.எண்.5985/2023/இ1)**

**தீர்மானம் எண் : 593, அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி.**